உ

கடவுள்துணை.

தேவர்கள் மூவர்கள் யாவர்களின்

தவஸவிதி கீர்த்தனை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமைது

மதருஸ், என். சி.

கோன்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

விளம்பரம்.

அற்புத பூலோகரம்பை கதை

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீகதை, குலோபகாவலிகதை நான்கு பக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் செலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷ கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றாய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷ கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவதுமன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

கடவுள் துணை.

தலைவிதி கீர்த்தனை.

கணபதிதுதி வெண்பா.

விண்ணுலகத்தேவர்களும் வேந்தர்களும்பட்டதுயர்
மண்ணுலகத்தாருணர மாவரையை - கண்ணுற்றே
சாற்றுமித்தலைவிதிக்கு சங்கரர்க்கும்யார்க்குமுதல்
தோற்றுகஜ முகனடியே துணை.

பல்லவி.

ஆரைவிட்டதுகாண் விதிவசம்
ஆரைவிட்டதுகாண் தலைவிதி
யெவரைவிட்டதுகாண்

அநுபல்லவி.

ஆரைவிட்டது யீஸ்வரனையும்
ஐயனிரந்துண்ணும் வையகமீதினில்
பாருள்ளவேலவர் வள்ளிக்காசைப்பட்டு
பாங்கானவேங்கை மரமாகிநின்றதும் ஆரை

சரணங்கள்.

சீதைபிறந்ததும் லங்கையழிந்ததும்
தேவேந்திரன்கண்களாயிரமானதும்

சூதாடிஐவர் வனவாசஞ்சென்றதும்
சொல்லுக்கரிச்சந்திரன் தான்விலையானதும் ஆரை

கர்னன்பிறந்ததும் ஐவர்வனவாசம்
காட்டினில்சென்றதும் நாட்டைமறந்ததும்
மன்ன திரியோதிரன் சேனையழிந்ததும்
வாலகுருவாலறாய் கூடியிருந்ததும் ஆரை

வாழுந்திருமால் வனவாசஞ்சென்றதும்
மார்க்கண்டனுக்காக யெமனையுதைத்ததும்
மூலபலங்களும் ராவணன்சேனையும்
முத்தித்திருவோடு சித்தமதானதும் ஆரை

பிரமன்சிரமொன்று பின்னமாய்ப்போனதும்
பெண்ணுக்காளானதும் பிச்சையெடுத்ததும்
தர்மரைப்போலநளன் தாரணிவிட்டதும்
தசரதன்பிள்ளையால் தாடகைப்பட்டதும் ஆரை

இந்திரன்சேவலைப் போலேபிறந்ததும்
பெழுந்துகௌதம ருஷியிடஞ்சென்றதும்
தந்திரமென்றஞான திருஷ்டியிற்பார்த்ததும்
திட்சணமகலிகை கல்லாய்ச்சமைந்ததும் ஆரை

பூர்வசக்ரவர்த்தி புகழேகின்றதும்
பொல்லாயிரணியன் பிள்ளையால்மாண்டதும்
தார்புகழ்சோமுகா சூரனிறந்ததும்
தானென்றமவுத்துவம் நீறுயெரிந்ததும் ஆரை

சந்தரந்தரிஷி கண்கள்நசிந்ததும்
சங்கரன்பார்த்தனால் அங்கமெலிந்ததும்
சந்திரன்பார்க்கையின் வுருவங்குறைந்ததும்
சாற்றவொண்ணாபல வாடிமடிந்ததும் ஆரை

பருவப்பெண்ணைதலையிற் பற்றிசுமப்பதும்
பாரதயுத்தத்தில் சாரதியானதும்
சிறுமணவூர்முனி சாமிசொன்னானிதை
சிந்தனைசெய்வாரோ நிந்தனைசெய்வாரோ. ஆரை

முற்றிற்று.

வேறுமெட்டு.

எந்தவழிவிட்டுவிடுமோ - தலையின்விதி
எந்தவழிவிட்டுவிடுமோ எங்

இந்தஜெகபந்தமறத் தீடேற்றிவைத்திடுமோ
வந்துவந்துபிறந்துழல வாவென்றிழுத்திடுமோ எங்

எல்லார்க்கொருவனவன் ஆளாக்கிவைத்திடுமோ
பொல்லாநரகமுய்ப போவென்றுதுரத்துமோ எங்

மாயாப்பிறவித்துன்ப மதுக்கரைக்கடைத்திடுமோ
நாயாப்பிறவித்துன்ப நடவென்றுதுறத்துமோ எங்

விண்ணவர்க்குத்தொண்டுசெய்ய வேண்டுதடங்காட்டிடுமோ, கண்ணின்வலை மாதர்மோக மயற்கொடுத்திழுத்திடுமோ எங்

அத்தனது சேவடிக்கு அன்பனுயமைத்திடுமோ
பாக்யவானுய்ப்பிறக்க நடவென்று துரத்துமோ எங்

ஆசாரங்காட்டியெனக் கருளமுதமூட்டிடுமோ
கர்த்தனைக்காணுமலே பாழ்கிணற்றிற்றள்ளிடுமோ எங்

மானைத்தரித்தவன்றன் மலரடிக்காளாக்கிடுமோ
ஈனப்பிறவிதந்து பிகத்தினிற்றுறத்திடுமோ எங்

தொண்டருக்குத் தொண்டனுகி தொண்டுசெய்யவைத்திடுமோ, மண்டலத்து மாதருக்கென் மதியினைக்கொடுத்திடுமோ எங்

சாயுச்சியமளித்துமுனி சாமிதனைக்கார்த்திடுமோ
காயகத்தியற்றஜெகக் காட்டினிற்றுரத்திடுமோ எங்

எந்தவழிவிட்டுவிடுமோ - தலையின்விதி
எந்தவழிவிட்டுவிடுமோ.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

நானேயெடுத்ததிரேகம்-நாளையிது
வீணுயழிந்துபோகும் நானே

அநுபல்லவி.

ஏனேபாதகஜென்மம்
நானேயெடுத்தேன்பாவி
வானோர்பணியும்பெரு
மானேயுனைத்தொழாமல் நானே

சரணங்கள்.

கருவுதரித்தபோது எண்சாண்
உருவமெடுப்பதேது
உருவாய்த்திரண்டுருண்டு
ஒன்றாய்முளைத்தெழுந்து
பிரியமாய்உரைப்பதேனோ
பெரியோருரைத்தனர்கள் நானோ

உத்தாருரவின்முறையார் நாளை
செத்தாலெவருமுதவார்
சுத்தமுடன்உடலை
சுடுகாடெடுங்களென்பார்
அத்தாவுன்சேவடிக்கி
ஆளாகினேன்சுவாமி நானோ

காமக்குரோதத்தாலே பாழ்மனம்
தாமஷப்படலாமோ
சோமசுந்தரகந்த
சாமிநானுந்தனிட
நாமந்தனைமறந்து
பூமிதனிலுழன்று நானோ

கேடுகெட்டபாழுடலே யீதுவெரு
பாடுபட்டுலகின்மேலே

தேடுகட்டில்வீடுகட்டி
சேர்த்துவைத்துப்பார்த்திருந்தாய்
கூடுவிட்டுஉயிர்போனால்
கூடவராதொருக்காலும் நானே

எண்சாணுடலும்நாளை ஓர்பிடி
வெண்சாம்பலாகும்வேளை
பெண்பாலுறவின்முறை
கண்ணீர்சொரிந்தழுது
என்பார்பலவிதமாய்
கண்பாரிதுசமயம் நானே

நந்தகோவிந்தன்மருகா அடியேனை
வந்தாளுஞ்செந்தில்முருகா
மைந்தன்தாமோதரன்சொல்ல
செந்தமிழுக்கிதங்கி
கந்தாகெதிவேறில்லை
வந்தாளிதுசமையம். நானே

தலைவிதி கீர்த்தனை,

முற்றிற்று.